# <u>இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம்</u>

## <u>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல: 11/2020 ன் படி மாற்றீட்டு பரீட்சையை மேற்கொள்வதற்கான விதி முறைகள்</u>

நாட்டின் கோவிட் நிலைமையை கருத்தில் கொண்டு, கலை மற்றும் கலாச்சார பீடத்தின் ஒப்புதலுடன், CEDPL வழக்கமாக நடாத்தப்படுகின்ற இறுதி பரீட்சைகளுக்குப் பதிலாக மாற்றுத் பரீட்சைகளை நடாத்துவது சம்பந்தமான பின் வரும் வழிகாட்டுதல்களை வெளியிடப்பட்டுள்ளதோடு, மாணவர்கள் இவ் வழிகாட்டுதல்களை மாற்றுத் பரீட்சைகளின் போது பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

1. அனைத்து பரீட்சை செயற்பாடுகளும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வெளிப்புற பட்டங்கள் மற்றும் தொழில்முறை கற்றல் நிலையத்தால் (CEDPL) னால் நிர்வகிக்கப்படும்.

2. VLE ஊடாக அனைத்து மாணவர்களும் தங்களது பரீட்சை அட்டவணையையும் (Exam Schedule) மற்றும் பரீட்சை வழிகாட்டி இணையும் (Guideline) தரயிறக்கம் (download) செய்து கொள்ள முடியும்.

3. அனைத்து பரீட்சார்த்திகளும் வினாத்தாள்களை VLE மூலம் நேரசூசியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் (கீழுள்ள அட்டவணையை பார்க்க) காலை 9.00 மணிக்கு பெற்றுக் கொள்வர். மாணவர்கள் தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்கான வினாத்தாள்களை கட்டாயமாக தரயிறக்கம் செய்து கொள்ள வேண்டும் என்பதுடன் அவர்களின் பாடங்களுக்கான பரீட்சையை பூர்த்தி செய்வதற்காக இரு வாரங்கள் வழங்கப்படும்.

4. தொழிநுட்ப அல்லது நடைமுறை பிரச்சினைகளினால் வினாத்தாள்களை பெற்றுக் கொள்ள யாரேனும் தவறும் பட்சத்தில், பாடப் பொறுப்பு விரிவுரையாளரைத் தொடர்பு கொள்வதனூடாக அவற்றை சாத்தியமான வேறுமுறையினூடாக வழங்குவார்.

5. இந்த பரீட்சை “திறந்த நூல் பரீட்சை” என்பதால் பாட வேளைகளில் வழங்கப்பட்ட கையேடுகள், சுய குறிப்புகள், பாடநூல்கள், பாடத்தோடு தொடர்புடைய ஏதேனும் குறிப்புகள் போன்றவற்றை பயன்படுத்துவதற்கு மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

6. வினாத்தாள் நான்கு (04) கட்டாய வினாக்களை கொண்டிருக்கும். A4 அளவான வெள்ளைத் தாளில் (white sheet) இரு பக்கமும் கையால் எழுதப்பட்ட விடைகளை (handwritten answers) மாணவர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

7. VLE இல் காணப்படும் விடைப் புத்தகத்தின் (answer scripts) முன் பக்கத்தை அனைத்து மாணவர்களும் பூர்த்தி செய்ய வேண்டும். விடைப் புத்தகத்தில் சேர்க்கும் ஒவ்வொரு மேலதிக பக்கத்தினதும் இடது மேல் மூலையில் சுட்டிலக்கம் (Index number), பாடக் குறியீடு (subject code) ஐ எழுத வேண்டும். **ஒவ்வொரு வினாத்தாளுக்கும் இணைக்கப்படக் கூடிய அதிகளவான பக்கங்கள் 30 ஆகும்.**

8. அனைத்துப் பாடங்களுக்குமான பரீட்சையை முழுமைப்படுத்துவதற்காக மாணவர்களுக்கு இரு வாரங்கள் வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விடைத்தாள்கள் (answer scripts/papers) மற்றும் கையொப்பமிடப்பட்ட நுழைவுச்சீட்டு (admission card) ஆகியன பதிவுத் தபாலில் (அனுப்ப வேண்டிய முகவரியை கீழே காண்க) உதவி பதிவாளருக்கு அனுப்பப்பட வேண்டும். **எக்காரணம் கொண்டும் கால நீடிப்பு** (Extensions) **வழங்கப்பட மாட்டாது.** காலந் தாழ்த்திப் பெறப்படும் தபால்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மாணவர்கள் ஒவ்வொரு பாடத்திற்குமான விடைத்தாள்களை வெவ்வேறாக இணைத்து, இடது மேல் மூலையில் பதிவிலக்கம், சுட்டிலக்கம் குறிப்பிடப்பட்ட ஒரு கடித உறையில் (single envelop) இட்டு அனுப்ப வேண்டும்.

9. விடைத் தாள்களை சமர்ப்பிப்பதற்கான முதற் தெரிவாக பதிவுத் தபால் காணப்படும். இது சாத்தியமற்றதாக காணப்படின், குறித்த மாணவர்களின் வேண்டு கோளின் பெயரில் மென் பிரதியாக சமர்ப்பிப்பதற்கான (soft copy submission) ஏற்பாடுகளை குறித்த துறைத்தலைவர்கள் மேற்கொள்வர்.

10. இப்பரீட்சை சுயமாகவே செய்யப்பட வேண்டும். காட்டுதல், பார்த்தெழுதுதல், இதே கல்வியாண்டிலுள்ள ஏனைய மாணவர்களுடன் அல்லது முன்னைய வருட மாணவர்களுடன் இதனைப் பற்றி கலந்துரையாடல் ஆகிய அனைத்து வித செயற்பாடுகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

11. மாணவர்கள் தங்களுக்கு தேவைப்படுகின்ற நூல்கள், இணையத்தளங்கள் போன்றவற்றை பயன்படுத்தலாம். எனினும், இதன்போது, அவர்கள் இவற்றை துல்லியமாக மேற்கோள் காட்ட வேண்டும். இலக்கியத் திருட்டு (Plagiarism) முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.

12. மாணவர்கள் தங்கள் விடைப் பத்திரங்களை தெளிவாகவும் வாசிக்கத்தக்கதாகவும் சமர்ப்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தெளிவற்ற கையெழுத்து அவர்களின் புள்ளிகளில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

13. ஒரு குறிப்பிட்ட மாணவன் இவ் மாற்றீட்டு பரீட்சைக்கு தோற்ற தனது சம்மதத்தை தெரிவித்தல் வேண்டும்.. அத்தோடு, பரீட்சாத்திகள் பரீட்சையானது நேர்மையான முறையில் எழுதப்பட்டதாக பிரகடனம் ஒன்றை செய்தல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக அதன் மாதிரி இதனோடு இணைக்கப்பட்டுள்ளது. இவ் பிரகடணதை பூர்த்தி செய்து தமது ஒப்பதினை இட்டு விடைத்தாள் களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

14. ஆதிகார பூர்வ குழுமத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தகுந்த காரணமொன்றிற்காக பரீட்சைக்கு தோற்ற முடியாத மாணவர்கள் மற்றும் குறித்த இவ் மாற்றீட்டு பரீட்சைக்கு தோற்ற விருப்பம் அற்றவர்களும் குறித்த பாடத்தை எவ்வித தடைகளுமின்றி அடுத்த தடவையில் தோற்ற முடியும். (குறித்த கலைமாணி பட்ட கல்வி குழு (Board of Study of BA Programme) ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

15. ஏதேனும் அவசர தேவைகளின்போது ,குறித்த விடயத்தின் நிலைமைக்கேற்ப தீர்மானங்களை குறித்த கலைமாணி பட்ட கல்வி குழு மேற்கொள்வர்.

**மேலதிக விபரம்:**

| **Name of examination** | **Uploading Exam Schedule** | **Uploading Exam Admission** | **Uploading Exam Papers** | **Exam Weeks** | **Postal Date** |
|---|---|---|---|---|---|
| First Semester Examination – Professional Diploma in Counselling, Centre for External Degrees and Professional Learning (CEDPL) – 2018 / 2019 | 13-JAN-2022 | 13-JAN-2022 | 15-Jan-2022 | 15-JAN-2022 to 30-JAN-2022 | 31-JAN-2022 |
| Second Semester Examination – Professional Diploma in Counselling, Centre for External Degrees and Professional Learning (CEDPL) – 2017 / 2018 | 13-JAN-2022 | 13-JAN-2022 | 15-Jan-2022 | 15-JAN-2022 to 30-JAN-2022 | 31-JAN-2022 |

**குறிப்பு:**

தயவுசெய்து கடித தொடர்பாடலின் போது உங்களது பதிவு இலக்கத்தையும் (Registration Number) பாடத்தலைப்பையும் (Subject Title & Code) கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிக்கவும்

**Please indicate your Registration Number & Subject (Title & Code) on top of the left corner of the envelop.**

**Postal Address:**

**Mr. M.S. Umar Farook**
**Assistant Registrar**
**CEDPL**
**South Eastern University of Sri Lanka**
**University Park**
**Oluvil#32360**